Registered as Papera News

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 09 | (25 - 08 - 1992) | செவ்வாய்க்கிழமை | ஓசை 189

## இராணுவ உயர் பீடத்திற்கு புதிய நியமனங்கள் அறிவிப்பு

சிறிலங்கா இராணுவ உயர்மட்டத்தில் மூன்று பதவிகளுக்கான நியமனங்களை ஜனாதிபதி பிரேமதாச அங்கீகரித்துள்ளதாக தெரியவருகிறது. இதையடுத்து பிரிகேடியர் சிறிலால் வீரசூரிய, நடவடிக்கை இயக்குனராகவும் எச்.எஸ். ஹப்பு ஆராய்ச்சி இராணுவ செயலாளராகவும், எல் ரி டி. ஜெயசுந்தர பயிற்சி இயக்குனராகவும் நியமிக்கப்டுவர் என தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் கொல்லப்பட்ட அதிகாரிகளின் இடத்திற்கு புதியவர்கள் நியமிக்கப்பட்டமையால் இவ் வெற்றிடங்கள் ஏற்பட்டன. முன்னதாக இராணுவத் தலைமை அதிகாரி வை. பாலரட்ணராஜா செப்டப்பர்

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஜெயலலிதா ஆட்சிக்கு ஆபத்து

# காங்கிரஸுடன் பூசல் முற்றுகிறது

## முதலமைச்சர் ராஜினாமா? தமிழ் நாட்டில் பரபரப்பு

தமிழக முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. க. அரசாங்கத்திற்கு பெரும் அபாயம் உருவாகிவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. காங்கிரஸ் அ. தி. மு. க. உறவில் ஏற்பட்டுவரும் விரிசலும், அ. தி. மு. க. கட்சிக்குள் நிலவும் கருத்து வேறுபாடுமே இந் நெருக்கடிக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தமிழக ஆளுனர் பிஷ்ம நாராயண சிங்கிற்கு எழுதியுள்ள கடிதமொன்றில் தான் பதவிதுறக்கப் போவதாகக் குறிப்பிட்டுள்ளதாகவும் அறியவருகின்றது. இதனைத் தொடர்ந்து தமிழகத்தில் ஓர் பதற்றம் உருவாகியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மைக் காலமாக தமிழகத்தில் ஆளும் அ.தி.மு.க. விற்கும், தோழமைக் கட்சிக்கும் இடையில் முரண்பாடுகள் அதிகரித்தவண்ணமுள்ளன. அ.தி.மு.க. மதுரையில் இரு மாதங்களுக்கு முன்னர் நடத்திய மதுரை மாநாட்டுடன் வெளிப்படையாகத் தெரிய ஆரம்பித்த விரிசல் காங்கிரஸ் ஏற்பாடு செய்த வெள்ளையனே வெளியேறு 50 ஆவது ஆண்டு விழாக் கொண்டாட்டங்களுடன் மேலும் மோசமடைந்தது தமிழக காங்கிரஸில் ஒரு பிரிவினரான மூப்பனார் கோஷ்டியினர் ஜெயலலிதா ஆட்சியை கலைத்துவிடுமாறு கோரும் அளவிற்கு பிரச்சினை சென்றுள்ளது இதனைத் தொடர்ந்தே ஜெயலலிதா அவசர அவசரமாக டில்லி சென்று நரசிம்மராவைச் சந்தித்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

### வீரவேங்கை பாலகுமாரன்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கருவன் கேணி என்னும் இடத்தைச் சுற்றி வளைத்திருந்த சிறிலங்கா இராணுவத்தினர் இயக்க வேலையாகச் சென்ற விடுதலைப் புலிகள் போராளிகள் மீது பதுங்கியிருந்து தாக்கியதில் ஒருபோராளி வீரச்சாவு அடைந்தார்.

21-08-1992 அன்று இடம் பெற்ற இச்சம்பவத்தில் வீரவேங்கை பாலகுமாரன் (உதயன் அருளப்பு செல்வராஜா ஆறு

(4ஆம் பக்கம் பார்க்க)

## படை பதுங்கி தாக்குதல்; இரு பொதுமக்கள் பலி

திருக்கோணமலை மாவட்டம் பொன்னாங் கேணி என்னும் இடத்தில் பொதுமக்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளனர் இத்தாக்குதலில் இருவர் பலியாகியதுடன் ஒருவர் காயம் அடைந்துள்ளார். மேலும் இருவரைக் காணவில்லை.

கடந்த 21 ஆம் திகதி இடம் பெற்ற இச் சம்பவத்தில் சேனையூர் கிரவல் குழியைச் சேர்ந்தவர்களானசாமித்தம்பி வில்வராசா [வயது 45] செ. செல்வராசா [வயது 35] என்னும் இரு தமிழ் பொதுமக்கள் பலியாகினர்.

## வீரசசாவு



### வீரவேங்கை நக்கீரன்

வல்வெட்டித்துறைப் பகுதியில் 22-07-92 அன்று இடம் பெற்ற வெடிவிபத்தொன்றில் விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்

(4ஆம் பக்கம் பார்க்க)

## 3 முஸ்லிம்கள் பலி

அம்பாறை மாவட்டத்தின் மத்தியமுகாம் பகுதியில் மூன்று முஸ்லிம்கள் துப்பாக்கிப் பிரயோகத்தால் கொல்லப்பட்டுள்ளனர் இவர்களில் ஒருவர் பெண் என்றும் தெரியவருகிறது. இவர்களின் ஜனாஸா நல்லடக்கம் இடம் பெற்ற போதும் துப்பாக்கிப் பிரயோகங்கள் இடம் பெற்றுள்ளது.

### துப்பாக்கிச் சூடு வயோதிபர் காயம்

[நமது நிருபர்]

மாதகலைச் சேர்ந்த இராசநாயகம் (வயது 68) என்பவர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு தமிழ் நாட்டில் பயிற்சி எதிர்க்கட்சி தலைவர் குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்து உள்ளது என்றும், தமிழ் நாட்டிலேயே இப்போது அவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள் என்றும் தமிழ்நாடு சட்டசபையின் எதிர்க்கட்சித் தலைவர் எஸ் ஆர். பாலசுப்பிரமணியம் நேற்று முன்தினம் கூறியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில் தமிழ் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு விடுதலைப் புலிகள் தொடர்புகொள்ளும் தொலைபேசி எண்கள் சில காவல்துறையினருக்கு கொடுக்கப்பட்ட போதும்கூட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டார். இக் கூட்டத்தில் கருப்பையா மூப்பனாரும் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அலம்பிலில் புலிகள் அதிரடி; 4 படை பலி; பலர் காயம்

[நமது நிருபர்]

அலம்பில் இராணுவ முகாமில் அமைந்துள்ள நான்கு இராணுவக் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய திடீர் தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர் இவர்களிடமிருந்து நான்கு நவீன ரக துப்பாக்கிகள் உட்பட பல இராணுவப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

நேற்று அதிகாலை 12.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

## அலம்பிலில் வீரச்சாவு





## கைப்பற்றப்பட்டவை

## தமிழக முதல்வர் ஜெயலலிதா

கள் பயிற்சி பெற்று வருகிறார்கள் என்றும் தமிழ்நாடு சட்டசபையின் எதிர்க்கட்சித் தலைவர் எஸ் ஆர். பாலசுப்பிர நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு விடுதலைப் புலிகள் தொடர்புகொள்ளும் தொலை தில் கருப்பையா மூப்பனாரும் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

**தமிழக முதல்வர் ஜெயலலிதா**

# புலிகளுக்கு நிதி வழங்கினார் சுப்பிரமணியசுவாமியின் புரளி

(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா பணம் வழங்கியிருப்பதாக இந்திய ராஜ்ய சபா உறுப்பினரும் ஜனதாக் கட்சியின் தலைவர்களில் ஒருவருமான டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி கூறியுள்ளார்.

அவர்வெளியிட்ட அறிக்கை ஒன்றில் மேலும் தமிழக முதல்வர் ஜெயலலிதா பயத்தின் காரணமாக புலிகளோடு தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருப்பதாகவும், இதற்காக தமிழ்ப் பத்திரிகையான 'தராசு' இதழின் மூலமாகப் பெருந்தொகைப் பணம் கைமாறப் பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அரசியல்வாதிகள், பத்திரிகையாளர் உட்பட இருபத்தெட்டுப் பேர்களின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்பதற்கு ஜெயலலிதா பணித்துள்ளார்.

தமிழகத்தில் புலிகள் நடவடிக்கை அதிகரித்துவிட்டது. புலிகள் கடலோரப் பகுதியிலிருந்து டீசல் மற்றும் மருந்து வகைகளை யாழ்ப்பாணத்துக்குக் கடத்திச் செல்கிறார்கள் இது குறித்து மத்திய அரசு நடவடிக்கை எடுக்கா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் தொடர்பு; ஜெயலலிதா மறுப்பு

(சென்னை)

விடுதலைப் புலிகளோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முனைந்ததாக வெளிவந்த குற்றச் சாட்டுகளை முதல்வர் ஜெயலலிதா மறுத்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் அவர் மேலும் கூறுகையில் நாட்டின் வன்முறைக் கலாசாரத்தை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கிரஸ் ஆட்சியும் தேவை உறவும் முறியக் கூடாதாம்

(சென்னை)

தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சியைக் கொண்டுவர வேண்டும் என்று காங்கிரஸ் தொண்டர்களிடையே நிலவும் எண்ணத்தை அ. இ அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடனான உறவை முறிக்க வேண்டும் என்ற கருத்தாகக் கொள்ளக்கூடாது என்று மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அஜித்சிங் கருத்துத்தெரிவித்திருக்கிறார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளரிடம் பேசுகையில், இரு கட்சிகளுக்குமிடையிலான உறவு தொடரும் என்றார்.

நேற்றுக்காலை சென்னை வந்து சேர்ந்த அஜித்சிங் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவைச் சந்தித்துப்பேசினார்.

# புலிகள் ஆதரவுக் குரல்கள் தமிழகத்தில் ஒலிக்கின்றன

(சென்னை)

இந்திய சுதந்திர தினமான ஆகஸ்ட் 15 இல் 'யாருடைய சுதந்திரத்தை கொண்டாடுகிறோம்?' என்ற கேள்வி எழுப்பப்பட்ட சுவரொட்டிகள் சென்னை பஸ்களில் ஒட்டப்பட்டிருந்தன. இந்தச் சுவரொட்டிகளை ஒட்டியவர்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானவர்கள் என்றும், புலிகளுக்கு சார்பான சக்திகளின் குரல் அண்மைக் காலத்தில் மீண்டும் ஒலிக்கத் தொடங்கியுள்ளது என்றும் சென்னையிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



கப்டன்

**அன்பரசன்**



2 ஆம் லெப்

**சுடர்**

அலம்பில் இராணுவ முகாமின் நான்கு காவலரண்கள் மீது 24-8-1992 அன்று நடத்தப்பட்ட திடீர் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் இரண்டு போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவு அடைந்த கப்டன் அன்பரசன் (அச்பர்- திருச்செல்வம் சதீஸ்குமார் தேவாபுரம் முரக்கட்டாஞ்சேனை மட்டக்களப்பு) 2 ஆம் லெப்டினன்ட் சுடர் (கந்தசாமி கௌரீஸ்வரன் ஊாக்காச்சி வெட்டை மண்டூர்) ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## கைப்பற்றப்பட்டவை

அலம்பில் இராணுவ முகாம் காவலரண்மீது நேற்று விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்:-

| | | |
|---|---|---|
| ★ | ஏ கே.எல். எம். ஜி | 01 |
| ★ | ரி- 56 -2 ரக துப்பாக்கி | 02 |
| ★ | ரி- 56பட் ரக துப்பாக்கி | 01 |
| ★ | நடுத்தர ரவைகள் | 2480 |
| ★ | ஏ. கே.எல்.எம். ஜி. லிங்குடன் | 100 |
| ★ | 40 மிமீ எறிகணை | 03 |
| ★ | ஜே ஆர். கைக்குண்டு | 01 |
| ★ | புகைக் குண்டு | 03 |
| ★ | ரி- 56 மகசின் | 07 |
| ★ | ரம் மகசின் | 01 |
| ★ | ஏ. கே.கோல்சர் | 03 |
| ★ | ரி 81 ரைபிள் கிறனைட் | 01 |
| ★ | கமரா | 01 |
| ★ | தண்ணீர்க் கான் | 01 |
| ★ | தலைக்கவசம் | 04 |
| ★ | தொப்பி | 01 |
| ★ | சப்பாத்து | சோடி 01 |
| ★ | கிட்பாக் | 01 |
| ★ | மழை அங்கி | 01 |

# திருமலையில் கண்ணிவெடி அதிகாரி உட்பட ஐவர் காயம்

திருக்கோணமலையில் விடுதலைப் புலிகள் வைத்திருந்த கண்ணிவெடியில் இராணுவ வாகனம் சிக்கி வெடித்ததில் ஓர் அதிகாரி உட்பட ஐந்து இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

ரோந்து சென்று கொண்டிருந்த இராணுவம் நேற்று கல்லாறு, மதிலாறு என்ற இடங்களுக்கிடையில் செல்லுகையிலேயே இராணுவ வாகனம் கண்ணிவெடியில் சிக்கியது

# புலிகளை ஒடுக்க ஆட்பலம் போதாது தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு

## தளபதி சிசில் வைத்தியரட்ணா தெரிவிப்பு

(கொழும்பு)

புலிகளை அடக்குவதற்கு தேவையான ஆட்பலம் தம்மிடம் இல்லை எனவும் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு விரைவில் அரசியல் தீர்வு காண வேண்டும் என்று இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ணா பலாலி இராணுவ தளத்தில் பத்திரிகையாளருக்கு பேட்டி அளித்த அவர் மேலும் கூறுகையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் புலிகளைப் பலவீனப்படுத்துவதன் மூலம் அதற்கான சூழலை உருவாக்குவதற்கே நாம் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளோம் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் போதிய படை பலமும் வளங்களும் இல்லை என்றும், போதுமான அளவு ஆட்பலம் இருக்குமெனின் எழுபத்துஇரண்டு மணி நேரத்தில் தமது பணியை பூர்த்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# குடும்பமோதல் தொடர்ந்தால் கட்சி தலைமை வெளியாரிடம்

## -சுதந்திரக் கிளை எச்சரிக்கை

(கொழும்பு)

பண்டாரநாயக்க குடும்ப அங்கத்தவர்களிடையே மோதல்கள் தொடருமெனின் வெளியாரிடம் கட்சித்தலைமை போய்ச் சேரவேண்டும் என்று பலாங்கொடையின் சுதந்திரக் கட்சிக் கிளையின் அங்கத்தவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியினுள் பண்டாரநாயக்காவின் புதல்வரான அநுராவுக்கும், புதல்வியான திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்கவுக்கும் இடையில் பதவிப் போட்டியும் அதிகார மோதல்களும் இருந்து வருவது தெரிந்ததே.

பலாங்கொட சிறிலங்காசுதந்திரக் கட்சியின் முக்கிய ஆதரவாளர்களைக் கொண்ட பகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

இதே நேரம் சுதந்திரக்கட்சித்தலைவி சிறிமா பண்டாரநாயக்காவிற்கும் கட்சியின் தேசிய அமைப்பாளர் அநுரா பண்டாரநாயக்காவிற்கும் இடையே ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டியை முடிவுக்குக் கொண்டு வர கட்சியின் நடுநிலையான எம். பி. க்களை கொண்ட குழு சமரச முயற்சியை மேற்கொண்டு வருகின்றது. அனில் முனசிங்கா, கே. டி. இரத்னாயக்கா, ரிச்சார்ட் பத்திரன உட்பட பல எம். பி. க்களை கொண்ட இந்த குழு கடந்த வியாழக்கிழமை அநுரா பண்டாரநாயக்காவைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தியது.

தொடர்ந்து இன்னும் சில தினங்களில் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவையும் இக்குழு சந்திக்கவுள்ளது.

பேச்சுவார்த்தைகள் தொடர்பாக கருத்து வெளியிட்ட இக்குழுவை சேர்ந்தஒருவர் 'எமது சமரஸ முயற்சி வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு அநுராவை சந்தித்த பின் இந்த நம்பிக்கை ஏற்பட்டுள்ளது'' எனத் தெரிவித்தார். ஆனால் அநுரா என்ன கூறினார் என்பதைக் கூற மறுத்துவிட்டார்.

### இசையரங்கு

நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கின் இன்றைய நிகழ்ச்சியில் கே எம்.பஞ்சாபிகேஷன், எம்.பி. நாகேந்திரன் ஆகியோர் நாதஸ்வரம் வாசிக்க உள்ளனர். தவில் கலைஞர்களாக கே. ஆர். புண்ணியமூர்த்தி, கே. நித்தியானந்தம், எஸ். சொர்ணலிங்கம், எஸ். முருகையா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

### இன்று

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு மணலியம்பதி ஸ்ரீ அம்மன்-ஐயனார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று 25-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை விசேட சங்காபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாட்டுடன் முடிவடையும்.

★ ★

நல்லூர் அருள் மிகு ஸ்ரீகந்தசுவாமி ஆலயத்தில் நீண்டகால இடைவெளிக்குப் பின் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்குப் பெரிய சப்பரத்தில் முருகப்பெருமான் வள்ளி, தெய்வானை சமேதராக வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிக்க உள்ளார். (24)


## வரி விளம்பரம்

### 'நிழல்கள்' சிறுகதைத் தொகுப்பு

''அக்கினியில் கருகும் ஆத்மாக்கள்'' மூலம் முதற்பரிசான தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்ட செல்வி சந்திரா தியாகராசா (திருமதி சந்திரா இரவீந்திரன்) வின் பரிசுபெற்ற சிறுகதைகள், குறுநாவல் அடங்கிய ''நிழல்கள்'' பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம், உதயன் புத்தகசாலை பருத்தித்துறை ஆகிய இடங்களில் விற்பனையாகின்றது. (3071)

### எழுதுவினைஞர்களுக்கான பயிற்சி

வடமராட்சியில் உயர்கல்வி நிறுவனமும், மோடேன் கொமேஸ் நிறுவனமும் இணைந்து நடாத்தும் எழுது வினைஞர் அனுமதிப் பரீட்சைக்கான துரித பயிற்சி, திறமை மிக்க ஆசிரியர்களால் 26-8-92இல் ஆரம்பமாகிறது இன்றே பதிவு செய்யுங்கள். மோடேன் கொமேஸ், சிவன்கோவிலடி, பருத்தித்துறை. (3072)

### புத்தகக்கண்காட்சியில்

ஐந்து மீரா பிரசுரங்களை வாங்குபவர்களுக்கு 50 ரூபா பெறுமதியான ''மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்'' என்னும் புதிய நாவல் அன்பளிப்பாக வழங்கப்படுகிறதுஸ்ரீகாந் புத்தகசாலைநல்லூர் கோயில் முன்புறம் நல்லூர். (சி/4908)

### பகவான் ஸ்ரீநீலகண்ட பாபா நூல்கள்

பகவான் ஸ்ரீ நீலகண்டபாபா அற்புத வரலாறும், செப்டம்பரில் வியாழமாற்றமும் செவ்வாய் மாற்றமும் ரூ 8. 50 (இரண்டாவதுபதிப்பு)எங்கும் விற்பனையாகின்றன (நூலாசிரியர்) Pxof சத்தியதாஸன் கிடைக்குமிடம்: கிருஷ்ணசாமி புத்தகசாலை நவீனசந்தை, யாழ்ப்பாணம். (3064)

கேள்விப்பத்திர

### அறிவித்தல்

பாவனைக்குகந்த இரண்டாம்தர (2nd hand) மோட்டார்சைக்கிள்கள்/ ஸ்கூட்டர்கள்

## விற்பனையாளர் பணிக்கு பெண் தேவை

நகரிலுள்ள புத்தக வியாபார நிறுவனத்திற்கு பெண் விற்பனையாளர்கள் தேவை பூரண, சுய விபரத்துடன் விளம்பர இல. 166 மே/பா. ஈழநாதம் என்ற முகவரிக்கு 28-8-1992 க்கு முன் விண்ணப்பிக்கவும். (3070)

## இளிநொச்சி ஆனந்தபுரம் ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்

கிளிநொச்சி ஆனந்தபுரம் ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய உற்சவமூர்த்தி எழுந்தருளும் திருவிழா எதிர்வரும் 29ஆம், 30ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

இவ் விழாவில் அடியார்கள் அனைவரும் கலந்து அருள் பெறுவார்களாக.

ஆலய பரிபாலன சபையினர்.

ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்,
ஆனந்தபுரம்
கிளிநொச்சி.

(3076)

## COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

4 MONTHS

திங்கள், புதன் வகுப்புக்கள்

ஆரம்பம்: 26 - 08 - 1992
10.30 மணி

*Lectures By* S P SIVAPATHASUNDARAM
*M. I. D. P. M. (Lond)*

- ★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
- ★ கூடிய செய்முறைப் பயிற்சி
- ★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்

*I. A. B* (All *Stages*) எழுதுவினைஞர் சேவை
*SHTORT HAND & TYPING*
நடைபெறுகின்றன.

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
(Pioneers in Computer Education)
16, 3rd CROSS STREET, JAFFNA.
(சி-4937)


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17-06-1948



உதிர்வு 25-08-1989

### மி. இ. யோகதாசன்

என்ன பாவம் செய்தோமோ
அப்பா உமை இழந்தோம்
மூன்று ஆண்டுகள் தான் கடந்தாலும்
நாம் பட்ட துயரம்தான் மாறுமோ?
மறையுமோ?
விடிந்திடும் வைகறையினிலே
வாடியே வதங்குகின்றோம்
வடிந்திடும் கண்ணீரையே
தேடியே பார்க்கின்றோம்
திகைக்கின்றோம் காணவில்லை.

## நினைவு கூருகின்றோம்...
## 1992 - 08 - 25

1986ஆம் ஆண்டு இதேதினத்தில், மன்னார் 5-ம் கட்டைப்பகுதியில், ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய -

★ **ரமேஷ்** (சகாயம்)

யாழ் - கோட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**உஸ்மான்-கிழங்கு** (அப்துல்காதர் சாதிக் - 687/3, அராலி வீதி, யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு வந்தாறுமூலைப்பகுதியில், சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ராமு** (பிரான்சிஸ் வெனிஸ்டஸ் சுசியஸ் திலகம் - 187/1, கடற்கரை வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம்)

1989-ம் ஆண்டு ஆவரங்காலில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட சர்வோதய வீதியைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

1990-ம் ஆண்டு மண்டைதீவில், சிறிலங்கா இராணுவத்தினருடனான கடும் சமரில் வீரச்சாவெய்திய -

**முரளி** (பெனடிக்ற் குணபாலா - மரப்பாலம் - செங்கலடி, மட்டக்களப்பு)

**குணா** (காத்தமுத்து நாதன் - எழுவான் கரைவீதி, வந்தாறுமூலை, மட்டக்களப்பு)

யார், வேலித்தோட்டம், ஏயாபோஸ்ட், மலையகம்].

**கருணநிதி** (சர்வகுலராசா சிவரூபன் - சிவன்கோயிலடி, சித்தன்கேணி, யாழ்.)

**விஸ்வநாத்** (கணேசன் மயில்வாகனம் - 81/3, மருத்துவமனை வீதி, கொட்டடி, யாழ்.)

**ராஜ்** (தங்கவேலாயுதம் ஜெயராஜ் - தாளையடி வீதி, மயிலிட்டி, யாழ்.)

**பைரவன்** (விசுவலிங்கம் விமலகுமார் - 'கவிதை', கூழாவடி, ஆனைக்கோட்டை)

**சூட்டி** (கணபதிப்பிள்ளை யோகேந்திரராஜா-பாலாவி தெற்கு, கொடிகாமம், யாழ்.)

**நடிகன்/ராஜீவ்காந்தி** (நடராசாதிருஞானமூர்த்தி - வத்திராயன், மருதங்கேணி வடக்கு, தாளையடி, யாழ்.)

**சுபாஸ்** (குலசிங்கம் விஜயராசன் - 4 ஆம் வட்டாரம், வேலணை கிழக்கு, தீவகம், யாழ்.)

**வேல்ராஜ்** (சிவராசா சுதாகிருஸ்ணா-572/76, தட்டாதெருச்சந்தி, கலட்டி, யாழ்.)

**உதயவர்மன்** (நடராசா ஜெயானந்தம் - நீதிமன்ற வீதி, மல்லாகம், யாழ்.)

**ரமேஸ்** (அட்ஷரலிங்கம் சந்தானலிங்கம்-கொடிகாமம் யாழ்.)

**எட்றிச்** (எஸ்ரீபன் அனுராஜா - 1007, மானிப்பாய் வீதி, யாழ்.)

**நிதர்சன்** (சின்னத்தம்பி சந்திரகுமார் - பெரியவளவு, புலோலி தெற்கு, யாழ்.)

**உஷா** (பசுபதி பாலசுந்தரம் - சங்கானை மேற்கு பண்டத்தரிப்பு, யாழ்.)

**ரவிசங்கர்** (யாழ்ப்பாணம்)

**சக்கரவர்த்தி**

**கோணேஸ்**

**கங்கா**

# அறிவித்தல்

பாவனைக்கு கந்த இரண்டாம்தர (2nd hand) மோட்டார்சைக்கிள்கள்/ ஸ்கூட்டர்கள் கொள்வனவு.

யாழ். பல்கலைக்கழகத்திற்கு. பாவனைக்கு கந்த இரண்டாம்தர மோட்டார் சைக்கிள்கள்/ ஸ்கூட்டர்கள் இரண்டு கொள்வனவு செய்வதற்காக அதன் உரிமையாளர்களிடம் இருந்து கூறு விலைகள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிப்போர் அதன் விலையையும், கீழ்க்குறிப்பிடும் விபரங்களையும் விபரமாக எழுதி நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம். திருநெல்வேலி. யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 09-09-1992 காலை 9 30 மணிக்கு முன்னர் கிடைக்கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும்.

மோட்டார் சைக்கிள் / ஸ்கூட்டர் இனம் ( Model ) என்ஜின் வகை (Engine type) ஆகக்கூடிய வேகம் (MaxiMum speed), எண்ணெய் வகை (Lubrication)

விண்ணப்பதாரிகள் உரிய ஆவணங்களையும், வாகனத்தையும் தேவைப்படும் பட்சத்தில் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் பார்வையிடக்கூடிய முறையில், சமர்ப்பிக்கக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவ கடித இடதுபக்க மேல்மூலையில் " இரண்டாம் தர மோட்டார் சைக்கிள் / ஸ்கூட்டர் கொள்வனவிற்கான கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்

கேள்விப்பத்திரங்கள் 09-09-1992 காலை 10 00 மணிக்கு பல்கலைக்கழக சபைமண்டபத்தில் திறக்கப்படும்.

பதிவாளர்.
யாழ் பல்கலைக்கழகம்.
( சி/ 4938 )

---


... துயரம்தான் மாறுமோ?
மறையுமோ?
விடிந்திடும் வைகறையினிலே
வாடியே வதங்குகின்றோம்
வடிந்திடும் கண்ணீரையே
தேடியே பார்க்கின்றோம்
திகைக்கின்றோம் காணவில்லை.

விஸ்வமடு கிழக்கு,
விஸ்வமடு.

மனைவி, பிள்ளைகள்,
உறவினர், நண்பர்கள்.
( 3073 )

---

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



## மாவீரர் ராஜீவ்

(நடிகன் ராஜீவ் காந்தி)

(நடராசா திருஞானமூர்த்தி)

வீரஜனனம் 1962-2-15

வீரச்சாவு 1990-8-25

மருதங்கேணி மண்தனிலே மழலையாய் நீ தவழ்ந்தாய் மண்டைதீவில் சண்டையிட்டு மாவீரர் ஆகி விட்டாய் போராட்டப் பாதைதனில் பாராட்டைப் பெற்று விட்டாய் ஒரு நொடியில் போர் தொடுத்து நடிகன் எனப் பேர் எடுத்தாய். சண்டையிட்டு வன்னியிலே சாதனைகள் புரிந்து விட்டாய். கோட்டைதனை மீட்பதற்கு கொள்கையுடன் காத்திருந்தய் மாற்றான் படை மண்டைதீவில் வந்ததென்று அறிந்தாய் பொறுத்திருக்க மாட்டாமல் பொங்கி எழுந்து சென்றாய் தீவகத்தில் போர் புரிந்து தியாகி ஆகி விட்டாய். இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 38 வேங்கைகட்கும் எமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மருதங்கேணி
தாளையடி

(3012)

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

---

1990-ம் ஆண்டு மண்டைதீவில், சிறிலங்கா இராணுவத்தினருடனான கடும் சமரில் வீரச்சாவெய்திய -

**முரளி** (பெனடிக்ற் குணபாலா - மரப்பாலம் - செங்கலடி, மட்டக்களப்பு)
**குணா** (காத்தமுத்து நாதன் - எழுவான் கரைவீதி, வந்தாறுமூலை, மட்டக்களப்பு)
**கபில்** (இராமலிங்கம் ரவி - பெரிய புல்லுமலை, மட்டக்களப்பு)
**ராஜேஸ்** (முத்துக்குமார் சோமநாதன் கொடுவாமடு, மட்டக்களப்பு)
**சதீஸ்-றஜீன்** (கணபதிப்பிள்ளை இரத்தினம் - 8 - ம் வட்டாரம், முதலைக்குடா, முனைக்காடு, மட்டக்களப்பு)
**நிலக்சன்** [நாராயணபிள்ளை தயாளன் - கோயில் போரதீவு, மட்டக்களப்பு]
**ரகுபரன்** [நாகப்பன் பேரின்பராசா - கித்துள்வெவ, கரடியனாறு, மட்டக்களப்பு)
**ராம்கி** [நவரட்ணராஜா உமாசங்கர் - கங்குவேலி, கிளிவெட்டி, மூதூர், திருக்கோணமலை]
**மகிந்தன்** [சின்னத்தம்பி அருட்பிரகாசம் - 1-ம் வட்டாரம், இருதயபுரம், மூதூர், திருக்கோணமலை]
**சண்முகம்/அன்பு** (காந்தசிவம் அன்பரசன் 20, சி வி, வீதி, இருதயபுரம், மூதூர், திருக்கோணமலை)
**றெஜினோல்ட்** (இளையதம்பி குணசேகரம்-கல்லடி, ஈச்சிலம்பத்தை, மூதூர், திருக்கோணமலை)
**லெப். ஜிம்கெலி** (கிருஸ்ணமூர்த்தி கிருஸ்ணகுமார்- ஒலுமடு, நெடுங்கேணி, மணலாறு)
**ராஜிவ்** (கு. நடராசா - திருக்கோணமலை)
**லெப். இன்பன்** (கணபதிப்பிள்ளை குமரகுருபரன்- 2-ம் வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு)
**மணியரசன்** (யோசப் ஈழநேசன் - உடையார்கட்டு தெற்கு. விசுவமடு. முல்லைத்தீவு)
**அருணா / கருணா** (சேது பூபாலசிங்கம்- புளியங்குளம், அடம்பன், மன்னார்)
**பரணி** (ம. சந்திரராஜ் - மன்னார்)
**ஜொனி** (பீற்றர் சிங்கம் - 29, செட்டிகுளம், வவுனியா)
**உதயகுமார்** (குமாரசாமி மகேந்திரகுமார் - நெளுக்குளம், வவுனியா)
**கேதீஸ்** (பாலகிருஸ்ணன் சந்திரகாந்தன் - 179, சிவசுந்தரம் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி)
**சசி** (ஜெகநாதன் ஜெயசீலன்-3-ம் கட்டைச்சந்தி, முரசுமோட்டை, கிளிநொச்சி)
**வதனன்** (பொன்னுத்துரை இந்திரஜித் - 209, இந்திரஜித் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி)
**தர்சன்** [யோசப் அலெஸ்சான்டர்-உடையார் வேலித்தோட்டம், ஏயாபோஸ்ட், மலையகம்.
**நந்தன்** [யோசப் அலெக்ஸ்சாண்டார் - உடையார் வேலித்தோட்டம், ஏயாபோஸ்ட் மலையகம்]
**கிருபாகரன்** [பெரிய கறுப்பன் காளிமுத்து - உடை...

... புலோலி தெற்கு, யாழ்.)
**உஷா** (பசுபதி பாலசுந்தரம் - சங்கானை மேற்கு பண்டத்தரிப்பு, யாழ்.)
**ரவிசங்கர்** (யாழ்ப்பாணம்)
**சக்கரவர்த்தி**
**கோணேஸ்**
**கங்கா**
**ஈஸ்வரன்**
**சின்னப்பதாஸ்**
**மகிந்தன்** (கார்த்திகேசு ஏகாம்பரம் - சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி, யாழ்.)

காங்கேசன்துறையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**மயூரன்/அப்பன்** (சிவலிங்கம் மயூரதன் - பிரதான வீதி, அளவெட்டி, யாழ் )

யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**பில்லா** (மரியாம்பிள்ளை அல்போன்ஸ் - வெற்றிலைக்கேணி, யாழ் )

அம்பாறையில், சுற்றிவளைப் பொன்றினை மேற்கொண்ட சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட நொச்சிமுனை, பழைய கல்முனை வீதியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

மட்டக்களப்பில், சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது படுகொலை செய்யப்பட்ட கூலித்தொழிலாளியான வந்தாறு மூலையைச் சேர்ந்த 16 வயதுச் சிறுவன், மாணவி, வீட்டு வேலை செய்யும் பெண், செங்கலடி 2 - ஐச் சேர்ந்த பெண், விவசாயி, செங்கலடி 2 ஐச் சேர்ந்த கூலித்தொழிலாளி, கொடுவாமடுவைச் சேர்ந்த 2 கூலித்தொழிலாளர்கள். ஏறாவூர் ஐயங்கேணியைச் சேர்ந்த கூலித்தொழிலாளி, கொம்மாதுறையைச் சேர்ந்த வியாபாரி, புகைப்பட நிலைய ஊழியர் உட்பட 12 தமிழர்கள் - களுவாஞ்சிக்குடி இராணுவத்தினரால் பெரியகல்லாறு ஒந்தாச்சிமடம், கோட்டைக்கல்லாறு பகுதிகளில் சுட்டுக் கொல்லப்பட்ட 13 தமிழர்கள்.

ஊர்காவற்றுறையிலிருந்து அராலிச்சந்தியை நோக்கி முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டிலும், மற்றும், தரை, கடல் பகுதிகளில் நடாத்தப்பட்ட தாக்குதல்களிலும் கொல்லப்பட்ட பல தமிழர்கள் - மண்டைதீவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 2 சிறுமிகள் உட்பட சரவணை, மயிலப்புலம், பள்ளம்புலம், சோளாவத்தைப் பகுதிகளிலும் படுகொலை செய்யப்பட்ட பெருந்தொகையான தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயல்பட்டவராவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/4936]

நல்லூர் ... மன்றம் யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

அடிமைக்கு நேர்மையான செயலைச் செய்யக்கூட சுதந்திரமில்லை

- மகாத்மா காந்தி


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 25-08-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


## தீக்குளிக்க தயார்

“வடபகுதியில் சிறிலங்கா ராணுவத்துடன் இணைந்து செயற்பட்டு வரும் குழுக்கள் விரைவில் வடபகுதியில் இருந்து கிழக்கு மாகாணத்திற்கு மாற்றப்படவுள்ளார்கள். வடபகுதியில் இருந்து இவர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என இராணுவ உயர் அதிகாரிகள் பலர் தெரிவித்த யோசனைகளைத் தொடர்ந்தே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.’’ இவ்வாறு சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ‘லங்காதீப’ வார இதழ் தெரிவித்துள்ளது.

லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ணா உட்பட ஒன்பது அதிகாரிகள் கொல்லப்பட்ட கண்ணிவெடிச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறையில் இராணுவத்தினருடன் தங்கியுள்ள ஈ.பி.டி.பி குழுவினர் குறித்து சில அசட்டுத் தனமான பேரினவாத பத்திரிகைகள் எழுப்பிய மடத்தனமான சந்தேகத்தைத் தொடர்ந்தே இன்று இவ்வாறான இடமாற்றம் ஏற்படலாம் எனத் தெரிய வருகின்றது. ஆனால், ஈ.பி.டி.பி.யின் கடந்தகால வரலாறு தெரிந்த எவரும் இவ்வாறானதொரு சந்தேகத்தை கிளப்பியிருக்கமாட்டார்கள்.

மேலும், ஈ.பி.டி.பி. யினரின் ஆயுதங்கள் குறித்த அறிவும், போர் குறித்த அனுபவமும் பற்றி அறிந்திருப்பார்களேயானால் இவ்வாறு ஒரு எண்ணமே அவர்களுக்கு ஏற்பட்டிருக்காது. அதிகாரிகளின் வாகனம் சிக்கி சிதறிய கண்ணிவெடியில் ஒருவர் மிதித்திருந்தால் கூட அது வெடித்திருக்கும் என ஈ.பி.டி.பி.யின் செயலதிபர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்ததில் இருந்தே அவரது ஆயுதம் பற்றியதும் கண்ணிவெடி பற்றியதுமான அறிவு வெளிப்பட்டுள்ளது. அதாவது, வாகனங்களுக்கு வைக்கும் அமுக்க கண்ணிவெடிக்கும், மனிதர்களுக்கு வைக்கும் அமுக்க கண்ணிவெடிக்கும் இடையில் உள்ள வித்தியாசமே அவருக்குத் தெரிந்திருக்கவில்லை என்பதே அவரது போர் அறிவிற்குப் போதுமான சான்றாகும்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் தீவுப்பகுதிக்குள் புலிகள் அடிக்கடி ஊடுருவல் நடத்தியுள்ளனர். இது இராணுவ தரப்பிலும் ஊர்ஜிதப்படுத்தப் பட்டுள்ளதோடு, தீவுப்பகுதியில், புலிகளுடன் ஏற்பட்ட மோதலில், புலிகள் கொல்லப்பட்டதாகவும், இராணுவத் தரப்பு காயமடைந்ததாகவும் சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமையகம் அறிக்கைகள் விட்டுள்ளது. இதே வேளை

# தன்னாட்சி உரிமைக்காக போராடுவது சட்டவிரோதமான நடவடிக்கை அல்ல

## - இந்திய அரசுக்கு புலிகள் ஆட்சேப மனு

தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமையை சுயநிர்ணய உரிமையை) வென்றெடுப்பதற்காகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நடத்திவரும் நியாயமான விடுதலைப் போராட்டத்தை எந்த வகையிலும் ஒரு சட்ட விரோத நடவடிக்கையாகக் கருத முடியாது

இவ்வாறு விடுதலைப் புலிகள் இயக்கம் இந்திய அரசுக்கு ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது. இந்தியாவின் சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின்கீழ் விடுதலைப் புலிகள் இயக்கம்மீது தடை விதிக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்துச் சமர்ப்பிக்கப்பட்ட மனுவில் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேச தலைமையகத்தின் சார்பில் திரு. லோரன்ஸ் திலகர் புதுடில்லியிலுள்ள உயர்நீதிமன்றத்திற்கு இம்மாதம் 6-ந் திகதி ஒரு ஆட்சேப மனுவைச் சமர்ப்பித்தார். இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

“இந்தியாவின் சட்ட விரோதநடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின்கீழ் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதற்கு இந்திய மத்திய அரசுக்குச் சட்ட அதிகாரம் இல்லை. எனவே இந்தத் தடை அறிவிப்பு செல்லுபடியாகாது.’’

இலங்கைத் தீவில் நடைபெற்றுவரும் ஆயுதப் போரில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு போராட்ட சக்தியாக இயங்கி வருகிறது. கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகச் சிறிலங்கா அரசு தமிழ் மக்களின் அடிப்படையான மனித உரிமைகளை அப்பட்டமான முறையில் தொடர்ச்சியாக மீறிவந்த வரலாறு உலகறிந்த உண்மை. கடந்த நாற்பது ஆண்டுகளாக, மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் அநீதியான சட்டவாக்கங்கள் மூலம் தமிழரின் மொழியுரிமையை நசுக்கி, வேலை வாய்ப்பு உரிமையைப் பறித்துத் தாயகப் பூமியை அபகரித்துத் தமிழர்மீது ஒரு கொடுங்கோன்மை ஆட்சியை நிறுவினர். இந்த அநீதிகளை எதிர்த்துத் தமிழ் மக்கள் நடத்திவந்த நியாயமான போராட்டங்கள் எல்லாம் வன்முறை வாயிலாக நசுக்கப்பட்டது. தமிழர்களைப் பயமுறுத்தி பணியவைப்பதற்கு இனப்படுகொலை வடிவில் அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்டது. இந்தக் கொடூர ஒடுக்குமுறையின் நேரடி விளைவாகவே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமையில் தமிழரின் ஆயுத எதிர்ப்பு இயக்கம் உதயமாகியது. விடுதலைப் புலிகள் இயக்கமானது தமிழரின் போராட்ட சக்தி என்பதைச் சர்வதேச சட்டம் அங்கீகரிக்கிறது. சர்வதேச அரசியல் அரங்கிலும் இந்த உண்மை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. 1985-ம் ஆண்டு நடைபெற்ற திம்பு பேச்சுகளின் போதும், 1987-ம் ஆண்டின் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் வாயிலாகவும் இந்திய மத்திய அரசானது புலிகள் இயக்கத்தைத் தமிழரின் போராட்ட சக்தியாக அங்கீகரித்திருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமானது இந்திய மத்திய அரசின் பிரதேச சட்ட ஆட்சி அமைப்பிற்குள் செயற்படும் ஒரு இயக்கம் அல்ல. அத்துடன் இந்தியாவின் சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தில் குறிப்பிடப்படும் விதிகளின் அர்த்த பரிமாணங்களுக்குள் புலிகள் இயக்கம் செயற்படவில்லை.

ஆகவே, சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் விதிகளின் கீழ் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்வதற்கு இந்திய மத்திய அரசுக்கு சட்ட அதிகாரம் இல்லை.

இந்திய நிலப்பரப்பின் எந்தவொரு பகுதியாவது பிரிந்து செல்லவேண்டுமென்ற நோக்குடன் எந்தவொரு தனிநபரோ அல்லது ஒரு அமைப்போ சொல் மூலமோ, செயல் மூலமோ, எழுத்து மூலமோ, பேச்சு மூலமோ மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையும் ‘சட்ட விரோத’ நடவடிக்கை என இந்த தடைச் சட்டம் வரைவிலக்கணம் வரிக்கிறது. இப்படியான தடையுத்தரவு ஐ.நா. அரசியல் உரிமை சாசனத்திலும், சர்வதேச சட்டத்திலும் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை மனித உரிமையான கருத்து வெளிப்பாட்டு உரிமையை மீறுவதாக அமைகிறது. அதுமட்டுமன்றி, இந்திய அரசியல் யாப்பில் பொறிக்கப்பட்டுள்ள அடிப்படை அரசியல் உரிமைகளையும் மறுதலிப்பதாக அமைகிறது. எனவே இந்திய யாப்பு விதிகளுக்கும் சர்வதேச சட்டப் பிரமாணங்களுக்கும் முரணான இந்தத் தடை உத்தரவு சட்டரீதியாக செல்லுபடியாகாது.

விடுதலைப் புலிகள் இயக்கமானது தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமையை (சுயநிர்ணய உரிமையை) வென்றெடுப்பதற்காகப் போராடி வரும் ஒரு விடுதலை இயக்கம். எமது இயக்கத்தின் இந்த தன்னாட்சி உரிமைப் போராட்டத்தை சட்ட விரோத நடவடிக்கையாகக் கருதுவதோ அல்லது அந்த சட்ட விதிக்குள் அணுகுவதோ தவறானதாகும்.

இந்தியாவின் பிரதேச ஒருமைப்பாட்டை குலைப்பதோ அல்லது இந்தியாவின் இறைமைக்கு பங்கம் விளைவிப்பதோ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நோக்கம் அல்ல. இந்தக் குறிக்கோளின் அடிப்படையில் எமது இயக்கம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செயற்படவும் இல்லை.

இவ்வாறு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆட்சேப மனுவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# ‘மேஜர் ஜெனரல் விஜயவிமலரட்ணாவின் உடல் இரு துண்டாக சிதறிக் கிடந்ததைக் கண்டேன்’

## அராலி குண்டு வெடிப்பு சம்பவத்தை நேரில் கண்ட கோப்ரல் சில்வா அளித்த பேட்டி

“மேஜர் ஜெனரல்விஜய விமலரட்ணாவின் உடல் இரண்டு துண்டுகளாக சிதறிக் கிடந்தது. இடுப்புக்கு கீழ்ப் பட்ட பகுதியை முதலில் கண்டோம். சிறிது நேரத்தில் உடலின் மேற்பகுதியையும் ஒரு நட்சத்திரத்துடன் தனியாக கிடந்த இடது கையையும் கண்டெடுத்தோம்.’’

இவ்வாறு மேஜர் ஜெனரல் விஜயவிமலரட்ணாவின்மெய்ப் பாதுகாவலர் இருவருள் ஒருவரான கோப்ரல், டி.பி. கமல சிறி த. சில்வா குறிப்பிட்

வாகனமும். இறுதியாக கடற்படையினரின் வாகனமும் வந்தன.

ஊர்காவற்றுறையில் இருந்து கடற்கரையோரப் பாதை வழியாக அராலிச் சந்திவரை மூன்று வாகனங்களும் வந்தன. மேலும் சிறிது தூரம் சென்றதும் நாம் அனைவரும் மற்றைய இரண்டு வாகனங்களையும் இவ்விடத்தில் விட்டுவிட்டு ஒரு வாகனத்தில் போவோம்

குண்டுவெடித்த இடத்தில் 10 அடி நீள அகலமும் 5 அடி ஆழமுமான கிடங்கு காணப்பட்டது. 20-25 கிலோ நிறையான அமுக்கக் குண்டே வெடித்திருக்க வேண்டும்என்று நான் கருதுகிறேன்.

குண்டுவெடிப்பு நடந்த இடத்தில் இருந்து 25 அடிகளுக்கு அப்பால் கொப்பேகடுவ தூக்கியெறியப்பட்டுக் கிடந்தார். றோட்டில் தலை



பலவேகய I இன்போது முள்ளியானில் புலிகள் இராணுவ முற்றுகையை உடைத்துக்கொண்டு வந்துவிட்டனர். அவ்விடத்தில் இருந்து ஒருவாறாக மிகச் சிரமப்பட்டு விமலரட்ணாவை காப்பாற்றிக்கொண்டோம். அவ்விடத்தில் 47 இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

புலவேகய I இன்போது மீண்டும் ஒரு தடவை விஜயவிமலரட்ணா புலிகளின் சுற்றிவளைப்புக்குள் அகப்பட்டு

லப்பட்டதாகவும், இராணுவத் தரப்பு காயமடைந்ததாகவும் சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமையகம் அறிக்கைகள் விட்டுள்ளது. இதே வேளை தீவுப்பகுதிக்குள் நடந்த மோதல்களை புலிகளும் ஊர்ஜிதப் படுத்தியுள்ளனர்.

ஆனால் ஈ. பி. டி. பிக்கு எழுந்த பிரதான சங்கடம் என்னவென்றால், பலத்தபாதுகாப்பையும் மீறி தீவுப்பகுதிக்குள் விடுதலைப்புலிகள் ஊடுருவியுள்ளார்கள் என்பதை தாம்எவ்வாறு ஏற்றுக்கொள்வதுஎன்பதாகும். அடுத்து புலிகள் வைத்த கண்ணிவெடியில் சிக்கித்தான் இராணுவ அதிகாரிகள் மரணமடைந்தனர் என்பதை வற்புறுத்துவதன் மூலம், புலிகளுக்குப் புகழ் சேர்ந்து விடும் என்ற கவலை.

இந்நிலையில், கண்ணி வெடி தொடர்பாக ஈ. பி. டி. பியிடம் கேள்வி எழும்பியபோது, ஈ.பி டி.பி திகைத்துப் போய்விட்டது. விடுதலைப்புலிகளுக்குப் புகழ் சேர்க்காமல் தன்னைப் பாதுகாக்க வேண்டிய அவலநிலை ஈ. பி. டி. பிக்கு ஏற்பட்டது. இக்கட்டான இந்நிலையில்தான் ஈ. பி. டி. பி தன்னைப் பாதுகாப்பதற்கு அரசின் காலில் குப்பற வீழ்ந்தது.

''மறைந்த லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ எம்முடன் நல்ல உறவை கொண்டிருந்தார். அவர் கொல்லப்பட்ட சம்பவத்துடன் எம்மைத் தொடர்புபடுத்திக் கூறுவது விசமத்தனமானது. இது தொடர்பாகஎந்த நீதிவிசாரணையையும் எதிர் கொள்ள நான் தயராக இருக்கின்றேன்'' என ஈ- பி- டி- பி யின் செயலதிபர் டக்கிளஸ் தேவானந்த தெரிவித்தார். தமக்கும் கொலைக்கும் தொடர்பில்லை என கற்பூரம் அணைத்துச் சத்தியம் செய்தாவது, தம்மை நிருபிக்க டக்ளஸ் தேவானந்த தயாரானார். அவ்வளவு அவசியம் அவருக்கிருந்தது.

அத்தோடு ''பாராளுமன்ற தெரிவுக்குழுவின் முன் ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி அரசியல் தீர்வொன்றை முன்வைக்காவிட்டாலும் புலிகளைவென்றவுடன் அரசியல் தீர்வொன்றை ஜனாதிபதிமுன்வைப்பார்'' எனவும்டக்கிளஸ்தேவானந்தா குறிப்பிட்டார். அதாவது தங்களுக்கும் கொலைக்கும் தொடர்பில்லை என்பதோடு,ஐக்கிய தேசியக்கட்சிக்கும், பிரேமதாசாவிற்கும் தமது விசுவாசத்தை தெரிவித்துக் கொண்டார்.

ஆனால், சிங்களப் பேரினவாதம் இவை எதையும் நம்பிவிடப்போவதில்லை. இவ்வாறான முயற்சியின் பின்னரும் வடக்கில் இருந்து தமிழ்க்குழுக்களை கிழக்கிற்கு மாற்றுவதென்ற முடிவிலிருந்தே இதனை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது தமது விசுவாசத்தைக் காட்ட தமிழ் குழுக்கள் தீக்குளித்தாலும் சிங்களப் பேரினவாதம் தமிழ்க் குழுக்களை நம்பிவிடப்போவதில்லை. ஆனால், இதனைப்புரிந்து கொள்ளாத தமிழ் குழுக்களுக்காக தமிழர்கள் எவரும் கவலைப்படப் போவதுமில்லை.

---

விஜயவிமலரட்ணாவின்மெய்ப் பாதுகாவலர் இருவருள் ஒருவரான கோப்ரல், டி.பி. கமல சிரி த. சில்வா குறிப்பிட்டார். மற்றைய மெய்ப்பாதுகாவலரான கோப்ரல் எம் ஏ. உபாலி அராலிகண்ணிவெடித் தாக்குதலில் சிக்கி தனது இரண்டு கால்களையும் இழந்துள்ளார்.

சம்பவத்தை நேரில் கண்டவர்களுள் ஒருவரான கோப்ரல் டி. பி. சமலசிரி சில்வா தொடர்கையில்...

ஆகஸ்ட் 6ஆம் திகதி பலாலி இராணுவத் தளத்தில் இருந்து உலங்கு வானூர்தி மூலம் நாம் அனைவரும் காரைநகர் கடற்படைத் தளத்தை அடைந்தோம். மறுதினம், அதாவது 7ஆம் திகதியன்று அதிகாரிகள் மட்ட கலந்துரையாடல் ஒன்று காரைநகர் தளத்தில் இடம் பெற்றது. இது நீண்டநேரம் தொடர்ந்து நடைபெற்றது. இரவு ஒன்பது மணியின் பின்னரே முடிந்தது

மறுநாள் 8ஆம் திகதி எம் இருவரையும் அழைத்த விஜய விமலரட்ணா அவர்கள் ஊர்காவற்றுறைக்கு போவோம் எனக் கூறினார். 8 45 மணியளவில் நாம் படகுகளில் ஊர்காவற்றுறையை அடைந்தோம் அங்கு 3 லாண்ட்ரோவர்கள் எமக்காகக்காத்து நின்றன.

ஒரு வாகனத்தின் சாரதி ஆசனத்தில் விஜய விமலரட்ணா அமர்ந்தார். அவ்வாகனத்தின் முன் இருக்கையில் கொப்பேகடுவ அமர்ந்தார். மேஜர் ரூபசிங்க, மேஜர் அல்விஸ் உட்பட உபாலியும் நானும் பின் ஆசனங்களில் அமர்ந்து கொண்டோம்.

இரண்டாவது வாகனத்தில் ரியர். அட்மிரல் மொகான் ஜெயமகாவும் மேலும் நான்கு கடற்படை அதிகாரிகளும் ஏறினார்கள்.

3-வது வாகனத்தில் கேணல் ஸ்ரீபன் ஆரியசிங்க, கேணல் பலிப்பான ஆகியோர் ஏறினர். இவ் வாகனமே முன்னுக்குச் சென்றது. அடுத்ததாக விஜய விமலரட்ணா செலுத்திய

றதும் நாம் அனைவரும் மற்றைய இரண்டு வாகனங்களையும் இவ்விடத்தில் விட்டுவிட்டு ஒரு வாகனத்தில் போவோம் என கொப்பேகடுவ கூறினார். பின்னர் எம்மை இறக்கிவிட்டு அதிகாரிகள் அனைவரும் விமலரட்ணா செலுத்திய வாகனத்தில் ஏறினர். உபாலியையும், விக்கிரமரட்ணாவையும் வாகனத்தினுள் ஏறும்படி கேணல் பலிப்பான கூறினார். ஆயினும் இடமில்லாததால் வெளியில் நின்றபடி சென்றனர். நாம் எட்டுப்பேர் தங்கிவிட்டோம்.

அவர்களின் வாகனம் புறப்படுகையில் 9 45 மணி இருக்கும். நாம் திரும்பிச் செல்ல 10 மணிக்கே உலங்குவானூர்தி வருவதாய் இருந்தது 300 யார் வரை வாகனம் சென்றது எமக்கு தெரிந்தது. அப்பால் அது பற்றைகளுள் மறைந்து விட்டது. சிறிது நேரத்தில் உலங்குவானூர்தி வந்துவிட்டது. அதேசமயம் 300 யார் தூரத்தில் விஜயவிமலரட்ணாவின் வாகனம் வருவது தெரிந்தது.

மற்றைய இரண்டு வாகனங்களையும் திருப்பிக்கொண்டு உலங்குவானூர்தி நின்ற இடத்திற்குச் செல்ல ஆயத்தம் செய்த வேளையிலேயே நிலக்கண்ணி வெடித்தது.

நான் நின்ற இடத்தில் இருந்து 200 யாருக்கப்பால் வாகனம் இரண்டாக பிளந்து துண்டுகள் சிதறின. நெருப்பும், புகையும், மணலும் எங்கும் சூழ்ந்திருந்தன. மறுநிமிடமே அவ்விடத்திற்கு விரைந்து சென்றோம்.

இடத்தில் இருந்து 25 அடிகளுக்கு அப்பால் கொப்பேகடுவ தூக்கியெறியப்பட்டுக் கிடந்தார். றோட்டில் தலை மோதுப்பட்டு இரத்தம் பெருகியபடி நினைவிழந்து கிடந்தார். உபாலி குண்டுவெடித்த இடத்தில் மணலில் மூடப்பட்டு கிடந்தார்.

விமல ரட்ணாவின் உடல் இரண்டு துண்டுகளாக சிதறிக் கிடந்தது. இடுப்புக்குக் கீழ்ப்பட்ட பகுதியை முதலில் கண்டோம். சிறிது நேரத்தில் உடலின் மேற்பகுதியையும், ஒரு நட்சத்திரத்துடன் தனியாக கிடந்த இடது கையையும் கண்டெடுத்தோம்.

விமலரட்ணாவின் உடற் பாகங்களை ஒன்று சேர்த்து ''காப்பெட்'' ஒன்றில் சுற்றினேன்

10.15 மணியளவில் கொப்பேக்கடுவவையும், உபாலியையும், ஜெயமகாவையும் உலங்கு வானூர்தியில் பலாலிக்கு அனுப்பினோம்.

இரண்டாவது தரம் வந்த உலங்குவானூர்தியில் விஜய விமலரட்ணாவின் உடலுடன் நான் பலாலிக்கு வந்தேன். அச்சமயம் கொப்பேகடுவ விமான மூலம் கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்டு விட்டதாய் அறிந்தேன்.

ஏறத்தாள ஒரு மணி நேரத்தின் பின் விமலரட்ணாவின் வீட்டிற்கு இவ்விடயம் பற்றி தொலை பேசி மூலம் பலாலியில் இருந்து அறிவித்தேன். அவர்கள் ஏற்கனவே அறிந்துவிட்டதாய் கூறினர்.

பின்னர் பலாலியில் உள்ள, விமலரட்ணாவின் அலுவலக

லெப். ஜெனரல் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ணா, றியர் அட்மிரல் ஜெயமகா ஆகியோர் உட்பட 10 படையதிகாரிகள் கொல்லப்பட்ட அராலி குண்டு வெடிப்பு சம்பவத்தை விபரிக்கிறார் கோப்ரல் டி.பி. கமல சிரி சில்வா. கோப்ரல் சில்வா மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ணாவின் மெய்ப்பாதுகாவலராவர். நேரில்கண்ட சம்பவத்தை அப்படியே விபரிக்கிறார் கோப்ரல் சில்வா. 'லங்காதீப' ஞாயிறு சிங்கள இதழில் (ஆகஸ்ட் 23) வெளியான இவரது பேட்டியை இங்கு தருகிறோம்.



அறை பூட்டி சீல் வைக்கப்பட்டது. விமலரட்ணாவின் உடலுடன் விமான மூலம் கொழும்பு வந்து சேர்ந்தேன்.

நான் எட்டு வருடங்களுக்கு முன்னர் படையில் சேர்ந்தேன். சேவைக் காலத்தில் அரை வாசிக்கும் கூடிய நாட்கள் அதாவது 5 ஆண்டுகள் விமலரட்ணாவுடன் நின்றேன். உபாலி என்னை விட ஒன்றரை வருடம் முன்னரே மெய்ப் பாதுகாவலராக வந்துவிட்டார்.

நாங்கள் யாழ்ப்பாணத்திற்கு 21 மாதங்களின் முன் விஜய விமலரட்ணாவுடன் சென்றோம்,

''புலிகளின் தாக்குதல்களில் இருந்து எட்டு தடைவைகளுக்கு மேல் ஐயாவை காப்பாற்றிய எம்மால் இத்தடவை அவரைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது.''

''வலம்புரி'' இராணுவ நடவடிக்கையின் போது நாம் எதிர்பாராத விதமாக புலிகளின் 90 கலிபர் தாக்குதலுக்கு உட்பட்டோம். வாகனத்தில் இருந்து வெளியே பாய்ந்தோம். அப்பகுதியில் புலிகளின் மிதிவெடிகள் நிறைந்திருந்தன. ஒருவாறு மிதிவெடிகளில் அகப்படாமல் விமலரட்ணாவை காப்பாற்றி அங்கிருந்து அப்புறப்படுத்தினோம்.

பலவேகய I இன்போது மீண்டும் ஒரு தடவை விஜயவிமலரட்ணா புலிகளின் சுற்றிவளைப்புக்குள் அகப்பட்டுவிட்டார். அன்று இரவு தங்கும் இடத்திற்குக் கூட அவரால் வந்து சேர முடியாமல் போய்விட்டது.

காரை நகரில் நடைபெற்ற சண்டையின் போது புலிகள் பெருமளவில் ''பபா மோட்டர்''களினால் எம்மை தாக்கினார்கள். இவை மிகப் பெரியவை. இரண்டு பபா மோட்டர்கள் நாம் இருந்த இடத்தில் இருந்து 25யார் துரத்தில் விழுந்து வெடித்தன அதனால் விமலரட்ணாவின் காலில் காயம் ஏற்பட்டது.

பலவேகய II இன்போது கடந்த யூன் 27ஆம் திகதி உலங்கு வானூர்தி மூலம் விமலரட்ணாவும் நாம் இருவரும் வெற்றிலைக் கேணிக்கு சென்றோம். உலங்கு வானூர்தி இறங்குவதைக் கண்ட புலிகள் மோட்டர் தாக்குதல் நடத்த ஆரம்பித்தார்கள் நாம் இருவரும் விமலரட்ணாவை எமது உடலால் மறைத்து (body cover) பாதுகாத்தோம்.

இப்படியாக ஆனையிறவு, காரை நகர் பகுதி இராணுவ நடவடிக்கைகளிலும், பலவேகய I, II இலும், வலம்புரி நடவடிக்கையிலுமாக குறைந்தது எட்டுத் தடவைகள் நாம் இருவரும் மிகுந்த ஆபத்துகளில் இருந்து விமலரட்ணாவைப் பாதுகாத்தோம். கடைசியில் எம்மால் ஐயாவை பாதுகாக்கமுடியாது போய் விட்டது.

நான் எனது தந்தை இறந்த பின் அழுதது விமலரட்ணா அவர்கள் இறந்த போது மட்டும் தான்.

ஈழநாதம்

# பிரபாகரனை உருவாக்கியவர்கள் சிங்கள அரசியல்வாதிகளே

## -பிரேமதாசா குற்றச்சாட்டு

(கொழும்பு)

எண்பதாம் ஆண்டில் மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தல்களைக் குழப்பியவர்களே வடக்கு, கிழக்கு யுத்தத்தைத் தொடரச் செய்தனர் என்று கொட்டகலையில் சிறிபாத கல்லூரியின் திறப்பு விழா வைபவத்தில்கலந்து கொண்ட சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்; இவர்களால் தான் வேலுப்பிள்ளை பிரபாகரன் போன்றோர் உருவாகினர் எனவும், இவர்களாலேயே வடக்கு-கிழக்குயுத்தம் தொடர்கிறது எனவும் குறிப்பிட்டார்

அத்துடன் எமது கட்சியின் ஒரு பகுதியினர் எண்பதாம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்குச் சென்று அங்கு தேர்தல்களைக் குழப்பினர். வாக்குப் பெட்டிகளையே தூக்கிச் சென்றனர். அடாவடித் தனங்களில் இறங்கினர். இவர்களாலேயே பெறுமதிமிக்க யாழ் நூலகம் எரிக்கப்பட்ட துஇத்தினத்தில்தான் விடுதலைப் புலிகள் இயக்கத்தை வழிநடத்திட வேலுப்பிள்ளை பிரபாகரன் போன்றோர் உருவாகினர் எனவும் குறிப்பிட்டார்

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி

| வீர ஜனனம் | | வீரச்சாவு |
|---|---|---|
| 15 | | 25 |
| — | | — |
| 09 | | 08 |
| — | | — |
| 1966 | | 1986 |



### வீரவேங்கை ராமு

(பிரான்சீஸ் திலகம்)

ஆறாண்டுகள் எம்மை
ஆறாத்துயரிலாழத்தி
மீளாத்துயில் கொண்டிருக்கும்
எம் இனிய மைந்தனே!
பாரூரின் புகழுரைக்கும்
ஒப்பில்லாத் தீரனே
பிரான்சீஸ் பிலோமினாவின்
மைந்தன் நீ, திலகமே! என்று
ஊரவர்கள் உரைக்கும் பொழுதினில்!
உனை நாம் ஈன்றெடுத்த
பெருமைதனை எப்படி உரைப்போம்
விடுதலைத் தீயில் ஆகுதியானவனே-உன்
ஆன்ம சாந்திக்காக பிராத்திப்பதொன்றே
எங்களால் ஆனது.

திலகம் வீதி,
பாஷையூர். (சி/4942) -குடும்பத்தினர்

## 1-ம் ஆண்டு நினைவலைகள்

### கலந்துரையாடல்

சரல கோட்டத்திலும் கடமையாற்றும் சமூகச்சுல்வி சேவைக்கால ஆலோசகர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 2.00 மணிக்கு கல்வித்திணைக்களத்தில் உள்ள மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

9ஆம் ஆண்டிற்கான வரலாற்று நூல் வெளியிடும் வைபவம் தொடர்பாக முக்கிய முடிவுகள் எடுக்க இருப்பதால் சகலரையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அவர்கள்கேட்டுக் கொண்டுள்ளார் (ப)

## க. பொ. த. (உ/த) பரீட்சை நிலையங்களில்மாற்றமில்லை

நடைபெற்றுக் கொண்டிருக்கும் க. பொ. த உயர்தரப் பரீட்சைகள் அனைத்தும் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பரீட்சை நிலையங்களிலேயே இன்றும் நடைபெறும் என்று அறிவிசுக பட்டிருக்கிறது கல்வித்திணைக்களத்தால் முன்னர் வெளியிடப்பட்ட அறிவித்தலில் மேற்படி திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

### நினைவுக் கூட்டம்

கரவெட்டி வட்ட அவை பிரதேசத்தில் தமிழீழ போராட்டம் ஆரம்பித்த காலம் முதல் ஆடி, ஆவணி மாதங்களில் இதுவரை தமிழீழத்தை மீட்க போராடி வீர மரணமடைந்த 46 மாவீரர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி கரவெட்டி ஞானாசாரியார் பாடசாலையில் நடைபெறவுள்ளது (82)

## கிராம சேவையாளர் போட்டிப் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

கிராம உத்தியோகத்தர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப் பரீட்சை நாளை மறுதினம் நடைபெற உள்ளது.

இப்பரீட்சைக்கான சகல நடவடிக்கைகளையும் யாழ். கல்வித்திணைக்களம் மேற்கொண்டு வருகிறது பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த பரீட்சை நிலையம் மட்டும் மனிப்பாய் இந்துக் கல்லூரிக்கு இடம் மாற்றப்பட்டிருக்கிறது

மேலும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பரீட்சை அனுமதி அட்டைகளை தவறவிட்டவர்கள் தமது பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்களைச் சந்தித்து சுட்டிலக்கத்தைச் சமர்ப்பிக்குமிடத்து தற்காலிக அனுமதி அட்டை வழங்கப்படும் என்று கல்விப் பணிப்பாளர் அறிவித்திருக்கிறார். அத்துடன் ஆங்கில ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சை திட்டமிட்டபடி நாளை நடைபெறும். [க]

### பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம் (வ உ)

## அறிவித்தல்

பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ சங்கம் இராணுவ நடவடிக்கையால் மூடப்பட்ட கிளைகளை ஈடு செய்வதற்கு பின்வரும் விசேட கிளை நிலையங்கள் 25-8-92-ம் திகதி முதல் செயல்படும் என்பதை அறியத் தருகின்றோம். எமது சங்க நுகர்ச்சியாளர்கள் 5ஆம் இலக்க உணவு முத்திரை மற்றும் நிவாரணப் பொருட்களை கீழ்க் குறிப்பிட்ட கிளை நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்பதை அறியத் தருகிறோம்.

மானிப்பாய் ப. நோ கூ. சங்க முன்றலில் விசேட கிளை நிலையம்
சங்கானை சந்தை அருகில் விசேட கிளை நிலையம்
சரஸ்வதி கிளை 8, வட்டியடைப்பு கிளை நிலையம் 11

# இடம் பெயர்ந்த மக்களுக்கு உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில்கடந்த வாரம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்கான ஒருவாரகால அரச உலர் உணவு நிவாரணம் இன்றுமுதல் வழங்கப்பட உள்ளது

வலி தென்மேற்கு பகுதியில் கடந்த 20 ஆம் திகதி நடைபெற்ற இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டு சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து தற்போது சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில் ஆகிய பிரதேசங்களில் தஞ்சமடைந்த மக்கள் அனைவருக்கும் 25-08-1992 இல் இருந்து ஒரு வாரத்திற்கான உலர் நிவாரணம் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது இடம் பெயர்ந்த மக்கள் இடம்பெயர முன்பு பொருட்களை கொள்வனவு செய்த ப. நோ. கூ. சங்கங்களூடாகவே வழங்கப்படும். இந்த நடவடிக்கையை உடனடியாக தொடர்வதற்காக பின்வரும் விபரங்கள் உடனடியாக இடப்பெயர்ந்த மக்களின் சவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றன.

★ மேற்படி இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்த மக்கள் அனைவரும் தாம் தற்போது குடியிருக்கும் கிராமசேவகர்களிடம் சென்று தங்கள் குடும்ப விபரங்களை பதிய வேண்டும்.

★ பதியச் செல்லும் போது தங்கள் குடும்பப்பதிவு அட்டையையும், நிவாரண அட்டையையும் எடுத்துச் செல்லவும். (தொலைந்தால் அது பற்றி கிராமசேவகருக்கு அறிவிக்கவும்)

★ விபரங்களை பதிவு செய்த கிராமசேவகர் அக்குடும்பத்தின் தலைவர் பெயர், குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை, குடும்பப்பதிவு அட்டை இல. நிவாரணப் பெறுமதி ஆகியவை குறித்த விபரப்பட்டியலை தனது முத்திரையுடன் கூடிய கையொப்பத்துடன் ப. நோ. கூ. சங்கத்திற்கு முகவரியிட்டு உ. அ. அதிபருடாக கொடுக்கவேண்டும்.

★ பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கத்தின் பிரிவுக்குட்பட்டவர்கள் நேரடியாகச் சங்கத்தில் உலர் நிவாரணத்தினைப் பெறலாம். இதற்காக பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கத்தின் கிளைகள் சங்கானை, மானிப்பாய் ஆகிய இடங்களில் அமைந்துள்ளது.

★ இந்நோக்கத்திற்காக கிராமசேவையாளர்கள் விசேட கரும பீடங்களை அமைத்து தொண்டர்களின் உதவியுடனும், இடம்பெயர்ந்த பிரிவு கிராமசேவகர்களின் உதவியுடனும் தொடர்ச்சியாக செயலாற்றுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

★ முகாம்களில் தற்போது தங்கியுள்ள மக்களுக்கும் உலர் உணவு வழங்கப்படும் அந்த மக்கள் விரும்பினால் முகாம்களுக்கு வெளியே சென்று குடியமர்ந்து தனித்தனியாக சமயல் செய்யலாம் இல்லையேல் முகாம்களினுள் தொடர்ந்து வாழ விரும்பினால் தங்கள் உலர்உணவுப் பங்கீட்டினை முகாம் பொறுப்பாளரிடம் கொடுத்து அவர்களின் உதவியுடன்கூட்டாகசமையல் செய்து உண்ணலாம்.

### புலிகளுக்கு

திருப்பது இப்போதைய ஜெயலலிதா அரசுக்கு வழங்கிய அதிகாரத்துக்குத் துரோகம் செய்வதாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் தமிழகஅரசில் ஊழல்மலிந்து விட்டதாகவும், தமிழகஅரசு புலிகள் நடவடிக்கையைக் கட்டுப்படுத்தாமல் மெத்தனமாக இருக்கிறது என்று குற்றம் சாட்டினார்.

### ஜெயலலிதா

இதேவேளை, ஒரு காலத்தில் ஜெயலலிதாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமான எம். நடராஜனினால் சொந்தக் கட்சிக்குள் நெருக்கடிகள் உருவாகி வருவதாகவும், தெரிவிக்கப்படுகிறது உயர்மட்ட சட்டசபை அங்கத்தவர்கள் முதல் தமிழக அரசின் உயர் அதிகாரிகள் வரையிலும், பொலிஸ் மட்டத்திலும் நாகராஜனுக்குச் செல்வாக்கு உண்டு. அ.தி.மு.க. சட்டசபை உறுப்பினர்கள் 147 பேரில் 60—67 பேர் வரையில் நாகராஜனால் தெரிவு செய்யப்பட்டு 'டிக்கெற்' வழங்கப்பட்டவர்கள் ஆகும் மேலும் நாகராஜன் அ.தி மு கவிலும் அதற்கு வெளியிலும் ஜெயலலிதா எதிர்ப்பாளர்களோடு உறவுகளைவளர்த்து வருகின்றார் எனவும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை ஜெயலலிதா

### புலிகளை

செய்து விடலாம் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை வவுனியாவுக்கு நேற்று முன்தினம் காலையில் விஜயம் செய்த இராணுவத் தளபதிகள் சிசில் வைத்தியரட்ண, மற்றும் மேஜர் ஜெனரல் ஜெரி டி. சில்வா ஆகியோர் தாண்டிக்குளம் நோக்கி வந்த பயணிகளை இடைமறித்து இராணுவ நடவடிக்கைக்கான மக்கள் ஆதரவைக் கோரியிருந்தார்.

சுமார் எண்ணூறுபயணிகள் இவ்வாறு இடைமறிக்கப்பட்டு வவுனியா பிறவுண் கம்பெனிக் கட்டிடத்திற்கு அருகே கூட வைக்கப்பட்டனர். சுமார் மூன்றுமணி நேரத்துக்கும் மேலாக இவர்கள் அங்கு உரையாற்றினர்.

### துப்பாக்கிச்சூடு

இவர் கடந்த வெள்ளிக்கிழமை மாதகலில் இருந்த போது அன்று நடந்த சமரின் போது இராணுவம் இவரது காலில் சுட்டுள்ளது

காயமடைந்த இவரை

### அலம்பிலில்

இத் தாக்குதல் 15 நிமிடங்கள் நடைபெற்றது. இத் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்த போது காவலரண்களில் இருந்த இராணுவத்திற்கு உதவிக்காகஉள் முகாமிலிருந்து வெளியேறிவந்த இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகளால் கடுந்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை அலம்பில் பிரதான முகாமிலிருந்தும் முந்திரிகைக்குள இராணுவ முகாமிலிருந்தும் பரவலான மோட்டார், ஆட்லெறி ஷெல் வீச்சு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இத் தாக்குதலில் இரண்டு போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

### வீரச்சாவு

தார்.

வீரச்சாவு அடைந்த வீரவேங்கை நக்கீரன் (சங்கரலிங்

# 1-ம் ஆண்டு நினைவலைகள்



| தாயின் மடியில் | தாயகமடியில் |
|---|---|
| 02 | 05 |
| — | — |
| 01 | 09 |
| — | — |
| 1973 | 1991 |

## வீரவேங்கை பாறூக்

(தனபாலன் சிறிதரன்)
(சென் பற்றிக்ஸ் கல்லூரி மாணவன்)

**திதி: 25-08-1992**

எம் அருமை மகனே

பருவ வயதில் பள்ளி சென்று பாடம் கேட்காது
அரும்பான உன் ஆசைகள் மலராகும் நாளிலே
குண்டு பொழியும் சென்ரியில் செருக்குடன்
நிமிர்ந்து நின்று
எதிரியின் பாசறையை எதிர்த்து வீரமுடன்
மணலாற்றிலே களமாடினாய்
புதை குழியில் விதையாகி விட்டாய் - பாறூக்கே
எங்கள் வாழ்வுதான் இருளாக மாறி விட்டது-மகனே
மணலாற்றில் விடுதலை வேள்வியில் ஆகுதியான
நம் வீரர்
கரங்களில் ஏந்திய ஆயுதமும் மனதில் கொண்ட
உறுதியும்
என்றுமே என்றுமே அழிந்து விடாது - பாறூக்கே
செல்வோம் விரைவில் - மலரட்டும் தமிழ் ஈழம்
எமது மகனுடன் மணலாற்றில் வீரச்சாவு எய்திய
சக போராளிகளையும் இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

இன்று (25-08-92) செவ்வாய்க்கிழமை நடைபெற இருக்கும் ஆண்டு திவச நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள்- சக இயக்க உறுப்பினர்கள் யாவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. எஸ். தனபாலன்
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

உன்பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.
(சி/4940)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விசேட கிளை நிலையம்
சங்கானை சந்தை அருகில் விசேட கிளை நிலையம்
சரஸ்வதி கிளை 8, வடலியடைப்பு கிளை நிலையம் 11 அவ்விடத்திலேயே இயங்கி வருகின்றது.

அலுவலகம், கிராமிய வங்கி, பிரதான களஞ்சியம் என்பன சங்கானையில் உள்ள நாகநாதர் வைத்திய சாலை அருகாமையில் அமைந்துள்ள மட்பாண்ட கூட்டுறவுச் சங்க கட்டிடத்தின் ஒரு பகுதியில் இயங்கி வருகின்றது என்பதை அறியத் தருகின்றோம். சங்கத்தின் சகல தொடர்புகளையும் மேற்படி நிலையத்தில் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம். எமது சகல பணியாளர்களும் கடமைக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்வதுடன் சங்கத்தின் இயக்குனர் சபை உறுப்பினர்களையும் 25-8-92ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்,

பதில் பொது முகாமையாளர்
பண்டத்தரிப்பு பரிஷ ப. நோ. கூ. சங்கம்

(சி/4941)

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 01 | 25 |
| — | — |
| 08 | 08 |
| — | — |
| 72 | 90 |

## வீரவேங்கை பைரவன்

[விசுவலிங்கம் விமலகுமார்]

களத்தினில் சமராடி
காலத்தால் அழிந்திடா
காவியம் படைத்திட்ட
காவிய நாயகனே!
காலமெல்லாம் நின்புகழ்
காவியமாய் நிலைக்கட்டும்!

பன்குளம்,
திருக்கோணமலை.

உற்றார், உறவினர், நண்பர்கள்
[3080]

றார் எனவும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை ஜெயலலிதாவின் ராஜினாமாபற்றி எந்தவித உத்தியோகபூர்வமான ஊர்ஜிதப்படுத்தல்களோ, அல்லது மறுப்புகளோ இதுவரை வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் புதுடில்லி சென்று பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்துப் பேசுவதற்கு முன்பாக தமிழக ஆளுனருக்கு எழுதிய கடிதத்திலேயே பதவி துறப்பு பற்றிக் குறிப்பிட்டிருப்பதாக சென்னையிலிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை அரசியலில் கஷ்டமான காலங்களை எதிர்நோக்கும்போது ஜெயலலிதா பதவி துறப்பு நாடகமாடுவது வழமை என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

### வீரச்சாவு பால...

முசத்தான் குடியிருப்பு ஏறாவூர்) என்னும் போராளியே வீரச்சாவு அடைந்தவராவர். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

### புலிகளுடன்

அடியோடு ஒழித்து இருப்பதாகவும், அதன் மூலம் தமிழகத்தை பேராபத்திலிருந்து காப்பாற்றியதாகவும் குறிப்பிட்டார்.

### இராணுவ

30ஆம் திகதி ஓய்வு பெற்றதும் அவரின் இடத்திற்கு வடபகுதி இராணுவத் தளபதி ஜெரி. டி. சில்வா நியமனம் பெற உள்ளதாகவும் நம்பப்படுகிறது.

மேஜர் ஜெனரல் ஜெரி. டி. சில்வா இராணுவத்தின் மூன்றாவது நிலையிலுள்ள அதிகாரி என்பது குறிப்பிடத் தக்கது. இராணுவத்தின் நாலாவது மூத்தநிலை அதிகாரியாக மேஜர் ஜெனரல் திலக் பரணகம இருப்பது குறிப்பிடத்தக்கது.

போது இராணுவம் இவரது காலில் சுட்டுள்ளது

காயமடைந்த இவரை நேற்றுக்காலை இராணுவத்தினர் வெளியேற அனுமதித்துள்ளனர் தற்போது இவர் சங்கானை அரசினர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் (ச)

தார்.

வீரச்சாவு அடைந்த வீரவேங்கை நக்கீரன் (சங்கரலிங்கம் செந்தில்குமரன் குடியேற்றத்திட்டம் நாவற்குழி) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# நாடகம்

எதிர்வரும் தினங்களில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் திருகோணமலை மாவட்ட இடம் பெயர்ந்த கலைஞர்களின் ஒருங்கிணைந்த முயற்சியில்,

## "காணி நிலம் வேண்டும்"

[நாடகம்]

26 - 08 - 92 முகமாலை [பளை]

| | |
|---|---|
| 27 - 08 - 92 | துன்னாலை (கரவெட்டி) |
| 30 - 08 - 92 | கொடிகாமம் |
| 31 - 08 - 92 | யாழ் புகையிரத நிலையம் அருகில் |
| 05 - 09 - 92 | பருத்தித்துறை (பஸ்நிலையம் அருகில்) |
| 26 - 09 - 92 | மூங்கிலாறு (முல்லைத் தீவு) |

அன்பார்ந்த தமிழீழ மக்களே! இந் நாடகத்தில் வரும் பாத்திரங்கள், உரையாடல்கள் யாவும் கற்பனையாகவே அமைந்துள்ளன. எனவே உங்கள் சிந்தனைக்கு வேலைதரும் நாடகத்தைக்காண திரண்டு வாரீர்.

[சி / 4939]

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 24-08-1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 5365

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்

26-5777, 26-3321, 28-1901, 27-9756, 27-1380, 24-9825, 27-2016, 26-6075, 27-6704, 24-8429 24-457, 42-7312, 24-4707, 27-8959, 41-5605, 25-9869

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:

24-4957, 28-1799, 46-2043, 26-6309, 24-6437, 27-9771, 24-6350, 40-1737, 27-7419, 26-3998, 41-784, 26-4882, 22-3267, 26-6398, 27-7653, 26-524, 22-7003, 26-6568, 42-9625, 24-2879, 43-1019, 24-9938, 27-9030.